சவக்குழி தோண்டும் செப்படி வித்தைக் கும்பல், ஜரூர்!

Phone No. 4502 Regd. No. M. 5458
விலை அணா ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22—11—49) வெளியீடு: (23—11—49) [இதழ் 97

இராமாயணத்தை 'தர்மா மீட்டரா'கக் கொள்ளும் பரிதாபர்

வர்ணாச்சிரமத்தைப் போதிக்கும் மொழி கலாச்சாரம் நிரம்பிய நாம்!

பேச்சு வழக்கொழிந்த மொழிக்குப் பல்கலைக் கழகம் வேண்டுமாம்!

இந்திய நாகரிகமென எதைச் சொல்லுகிறார் தீக்ஷதர்?

"இந்திய கலாச்சாரம் நாகரிகம் ஆகியவற்றின் வளத்தையும் தூய்மையையும் ஆழத்தையும் அறிந்துகொள்வதற்கான சிறந்ததொரு சாதகமாகத் திகழ்கிறது சமஸ்கிருதம். இந்திய மக்கள் இதனை உணர்ந்து நடப்பதாகத் தெரியவில்லை.

'சமஸ்கிருதம் செத்த மொழியாகக் கருதப்படுகிறது. அதுதவறு; பேச்சு வழக்கில் இல்லாத மொழி என்ற தன்மையில் மட்டுமே அது மக்கள் தொடர்பை இழந்து அறிவுத் திறன்படைத்த கல்விமான்கள் மத்தியில் மட்டும் பயின்று, வரப்படுகிறது. மௌரிய, குப்த ஆட்சிக் காலங்களில் அதற்கிருந்த ஆதரவு வர வரக் குறைந்து விட்டதுதான் இதற்குக் காரணம்.

'சமஸ்கிருதப் பண்பு இந்நாட்டுமக்களிடையே உயிருக்குயிராய்க் கலந்து நிற்கையில்—ராமாயணத்திடம் மக்கள் வைத்திருக்கும் மரியாதையே இதற்குத்தக்கசான்றாகும்—சமஸ்கிருதத்தைமீண்டும் பழைய நிலைக்குக்கொண்டு வருவதா கடினம்?

'ஆங்கில மொழிக்கு நிர்வாக காரியங்களில் இருந்துவரும் அந்தஸ்தையும் முக்கியத்துவத்தையும் சமஸ்கிருதமும் ஏற்றுத் திறம் படத் திகழுதற்குப் பொருத்தமான மொழியேயாகும். இதனைக்'கற்பது கடினமானவேலையென மிகைப்படுத்திக்கூறப்படுகிறது; எளிதானமுறையில் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ளலாம்.

சமஸ்கிருத போதனையைப் பரப்பும் திட்டத்தில் அனைத்திந்திய சமஸ்கிருதப் பல்கலைக் கழகமொன்றுநிறுவும் முயற்சியிலீடுபட்டிருக்கும் அனைத்திந்தியசமஸ்கிருத சம்மேளனத்தின் மூன்றாவது மாநாட்டில் சொற்பொழிவாற்றிய பம்பாய் பாரதீய வித்தியாபவனம் பிரின்ஸ்பால் (தலைவர்) ஆச்சாரியா டி. ஏ. ஏ. வி. தீக்ஷதர் சிந்தியபொறுக்குமணிகளையே மேலே தந்திருக்கிறோம்!

பாரத இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வந்தபிறகு, மற்றெல்லாரையும் காட்டிலும் சமஸ்கிருத பண்டிதர்களேவந்த 'சுயராஜ்யத்தை' வகையோடு பயன்படுத்தி வருகின்றனர். பேச்சு சுதந்திரத்தின் உச்சாணிக்கிளையிலேறிக்கொண்டு, தங்கள் ஆசை—விருப்பம்—கனவு என்னென்னவோ அவற்றையெல்லாம் அடுக்கடுக்காகச் சொல்லுருவில் பொழிந்துவருகின்றனர். 'யாரவேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும், நினைக்கலாம், பேசலாம், எழுதலாமென்பதை அப்படியே 'அப்பட்டமாக'ச் செயலில் காட்டி வருகின்றனர். இதில் நமக்குத் தலையிடவேண்டிய அவசியமில்லைதானென்னினும், உருப்படியான காரியங்கள் செய்ய வேண்டியவை பற்பல இருக்க அவற்றை விடுத்து, மக்கள் மன்றத்தின் முன்புபுரைபட்ட கருத்துக்களை எடுத்துக்கூறி, கோணல் பாதை வகுக்கப்படுவதைக் காணும்போது, மக்கள் சார்பில் நிற்கும் நாம கைகட்டி வாளாயிருந்து விடுதல் முடியாது; அப்படி இருந்து விட்டால் கடமையினின்று வழுவியர்களாவோம்.

செத்த வடமொழிக்கு நாட்டில் ... நிலைநாட்டிக் காண்பது தான் பெற்ற சுயராஜ்யத்தின் பெரும் பயன் என்ற கோட்பாட்டோடு ஆதிக்க வகுப்பார் ஆங்காங்கே புறப்பட்டு விட்டதை ஆரம்ப கால முதற்கொண்டே எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். இயற்கையில் மாண்டுபோன ஒரு மொழியை செயற்கை மருத்துவம் செய்து, உயிரூட்டி, எடுத்தாட்ட வேண்டுமென்ற ஆசை கட்டுப்பாடாக ஒரு கூட்டத்தாரிடையே இருக்கிறதென்றால், இல்லாத பண்பெல்லாம் அதனிடம் இருப்பதாகக் கூறி 'மகுடி' ஊதி அதை யெடுத்தாட்ட நினைக்கிறார்களென்றால், வெறும் மொழியார்வம் மட்டுமல்ல அவர்களது பிடிவாதத்துக்குக் காரணம், வேறு பல லாபக் குறிக்கோள்களும் உண்டு அடிப்படையில் என்பது பெறப்படும். "ஒரு நாட்டை ஆதிக்கப்படுத்த ஆட்டிப் படைக்க விரும்பினால், அந்நாட்டு மொழியை உன் சொந்த மொழி துணைகொண்டு சீர் கேடுறச் செய்; மொழியிழந்து, அதன் வழி உணர்விழந்த மக்கள் உனக்கு அடிமையாவார்" என்ற முதுமொழியின் தத்துவத்தை முற்றிலு முணர்ந்திருந்த காரணத்தால்தான், அன்று அயலாராக வந்த கூட்டம் தன் மொழியாதிக்கத்தால் இத்தென்னாட்டைக் கவரவும், பின்னர் மக்கள் விழிப்பு நிலைக்கு வந்துற்றதன் படிப்பு தளரவே, மீண்டும் தனது பழைய துருப்பிடித்த ஆயுதத்தைக்கையாள நினைக்கவும் ஏதுவாயிற்று. பிறரை வாழ வைக்கும் தன்மை தனக்கில்லாததோடு

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

மாகாண சர்க்கார்களை மத்திய சர்க்காரின் ஏஜென்டுகளாக்குவதா?

அதிகப்படியான அதிகாரத்தைக் குவித்துக்கொள்வது பெருங்கேடு

கடந்த 19-ந் தேதியன்று ஆக்ரா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாச் சொற்பொழி வாற்றிய ஐக்கிய மாகாணக் கல்வி மந்திரி டாக்டர் சம்பூர்ணாநந்தர், இந்தியாவின் புதிய அரசியல் பற்றிய தமது கருத்தைத் தெளிவுபடுத்தினர்.

இந்திய அரசியலில் தான் கண்ட குறைகளை அவர் வகைபடுத்திக் கூறியதாவது:—

பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல் விதிமுறை, நடைமுறைகளினின்றும் பொறுக்கி யெடுக்கப்பட்ட கொள்கை, நடவடிக்கைகள் இன்னபிறவற்றோடு பழைய இந்திய சர்க்கார் ஆக்டின் சிற்சில அம்சங்களையும் சேர்த்துஇயற்றப்பட்ட அரசியல், நலந்தரத்தக்கஅரசியலாயிருக்கமுடியாது. அரசியலின் மற்ற மற்ற அம்சங்களை கவனிக்குமிடத்தும்; அவை விரும்பி வரவேற்கத் தக்க நிலையில் இருக்கக் காணோம். வரையறுத்து எழுதப்பட்ட அரசியலொன்று ஏறத்தாழ வலுவாகவும் தளர்ச்சிக்கிடமின்றியுந்தானிருக்க வேண்டும். ஆனால், எல்லாவற்றையும் இதனுள் அடக்க வேண்டும் என்று நமக்கிருந்த வெறி, அரசியலை அப்படியிப்படி திருத்த முடியாவொரு நிலையைச் சிருஷ்டித்து விட்டது."

டாக்டர் சம்பூர்ணாநந்தர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'எல்லா அதிகாரத்தையும் மத்திய ஆட்சியின் கீழே குவித்து வைத்துக்கொள்ள செய்யப்பட்டிருக்கும் முயற்சி கண்டனத்துக்குரிய மாபெரும் குறைபாடாகும். இதனால் மாகாணசர்க்கார்கள், மத்திய சர்க்காரின் ஏஜென்டுகள் என்ற நிலையினையே அடைகின்றன."

வரையறுத்துக் கூறிவிட்டார்!

'ரஷ்யக் கம்யூனிஸத்துக்கும், இந்திய சோஷலிஸத்துக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. ரஷ்யக் கம்யூனிஸம்யதேச்சாதிகார — சர்வாதிகார சர்க்காருக்குப் பாடுபடுகிறது. இந்திய சோஷலிஸ்டுகள் கிஸான் மஸ்தூர் அரசு நிறுவ உழைக்கின்றனர். கம்யூனிஸ்ட் ரஷ்யாவில் குடிமக்கள் உரிமை மறுக்கப்படுகிறது."

— ஜெயப்பிரகாஷ்நாராயண்

ஒரிஸ்ஸா, நவ. 17

காலத்துக்கொவ்வாத் திட்டத்துக்கு பணத்தைப் பாழாக்குவதா?

—:(0):—

மேலும் 50 பிர்க்காக்களுக்கு அபிவிருத்தித் திட்டமாம்!

சென்னை மாகாணத்தில் மேலும் 50 புதிய பிர்க்காக்களுக்கு, பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தை விரிவுபடுத்த சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாக கிராம அபிவிருத்தி இலாகா மந்திரி தோழர் ஆர். பரமேஸ்வரன் வானொலிச் சொற்பொழிவொன்றில் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்பு 34 பிர்க்காக்களில் இவ் அபிவிருத்தித் திட்டம் அமுலில் இருப்பதாக மந்திரி குறிப்பிட்டு, அவை திருப்திகரமான முறையில் வேலை செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இத்திட்டத்தால் உருப்படியான பலன் விளைவதாக உள்ளப்படியே சர்க்கார் நம்பினால், இந்த விஸ்தரிப்புத் திட்டத்தையும் மேற்கொள்வதில் அர்த்தமிருக்கிறது. காங்கிரஸ் பிரமுகர்கள் பற்பலரும் இத்திட்டத்தைக் கடிந்து வரவும் காண்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிர்க்காக்களில் சாதிக்கப்படும் வேலைகளைக் கவனிக்குமிடத்து, பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் காலத்துக்கு கந்ததல்ல என்பதோடு, பணம் சரியாகத் துணைசெய்வதேயாகுமென்பதை, சாதாரண அறிவு படைத்தோரும் உணர்ந்து விட்டனர். எனவே, பொருளாதார நெருக்கடிப் பஞ்சப்பாட்டு பாடும் சர்க்கார், இது போன்ற வீணான திட்டங்களில் பணத்தை விரயஞ் செய்வது பெருங்குற்றமாகும். இன்றைய நெருக்கடியான வறுமை நிலையிலாவது சர்க்கார் செம்மையறிவு வாய்ப்பெற்றவர்களாய், உருப்படியான காரியங்களை மேற்கொண்டு நடத்துவார்களாக.

'அதிகார போதையில் ஆணவ மிகுந்துள்ளனர்!

காங்கிரஸ் எம். எல். ஏ. கைகழுவினர்!

கிழக்குப் பஞ்சாப சட்ட சபை உறுப்பினரான தோழர் பாபு பச்சினி நவ. 18-ந்தேதியன்று மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியினையும் காங்கிரஸில் சாதாரண உறுப்பினர் பதவியினையும் ராஜினாமா செய்துவிட்டார்.

தனது ராஜினாமாவை விளக்கி பச்சினிசிங், பொதுச் செயலாளருக்கு விடுத்துள்ள கடிதமொன்றில், காங்கிரஸ் தலைவர்கள் வெகுவாக அதிகார வெறியும் போதையும் மிக்குக் காணப்படுகிறார்களென்றும், ஏழை மக்கள் நலத்துக்குதான் கூறிய யோசனைகளை நிராகரித்து விட்டனரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத் தொழில் பற்றி விசாரணை

நாட்டில் விவசாயத் தொழிலின் நிலையைக் கண்டறிய, இந்திய சர்க்காரின் தொழிலிலாகா விரைவில் விசாரணைக் குழுவொன்று நிறுவப் போவதாகத் தெரிகிறது. மேற்படி தொழிலாளரின் சம்பள வரையறை, வாழ்க்கைத்தரம், வேலைக்கான வாய்ப்புகள் இன்ன பிறவற்றை இவ் விசாரணைக் குழு கண்டறியுமெனத் தெரிகிறது.

இக் காரியத்துக்காக, இந்தியா 20 யூனிட்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு யூனிட்டும் ஒரு குப்புவைசர் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சூப்பர்வைசருக்கும் உதவியாக [illegible] அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். பூர்வாங்க விசாரணை வேலையும் துவக்கியாகி விட்டதாம்.

சிந்தனைக்கு!

சுயேச்சை யூனிட்டுகளைக் கொண்ட சமஷ்டி சர்க்காரை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் 1946-ல் கூட்டப்பட்ட அ. நி. சபை பலவீனத்தின் காரணமாக மத்திய சர்க்காரின் அதிகாரத்தை அதிகரித்திருக்கிறது.

— டாக்டர் வி. ஷிவராவ்

மாலை மணி

சென்னை 22—11—49 செவ்வாய்க்கிழமை

நீதிக்குப் பாதுகாப்பு

அகில உலகத்திலும் அமைதியை நிலைநாட்டவும், உலக நாடுகளிடையே உறவு முறையை ஏற்படுத்தவும், மக்களினங்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளை நீக்கிச் சமத்துவ வாழ்வை உண்டாக்கவும், ஐக்கிய நாடுகள் அவை, இருந்து வருவதாக அறிவிக்கப்படுகிறோம்.

ஐக்கியநாடுகள் அவை கொண்டுள்ள கொள்கையும், அடைய விரும்பும் நோக்கமும் நல்லவையே என்றாலும், அவற்றை நிறைவேற்றி வைக்கக் கூடியநிலையில், ஐ.நா.வை, வல்லரசுகள் விடுவதில்லை. வல்லரசுகள், தங்களுக்குச் சாதகமாக, ஐ. நா. வைத் தம்பக்கம் இழுத்துக் கொள்ளவே அன்றாடம் பாடுபடுகின்றன. வருந்தக் கூடிய நிலைதான் என்றாலும், நடைபெற்று வருகின்றது!

நீதியையும், நேர்மையையும் முன்னிறுத்திப் பார்க்காமல், நிறவெறித் திமிரையே முன்வைத்துத், தன் கொடுங்கோலாட்சியை நடத்தி வருகிறது, தென் ஆப்பிரிக்கா யூனியன் அரசாங்கம். தென்ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களுக்கும், தென்ஆப்பிரிக்காவில் குடியேறியிருக்கும்இந்தியத்துணைக் கண்ட மக்களுக்கும், மலான் அரசாங்கம் இழைத்து வரும் அநீதிகளும் கொடுமைகளும், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போவனவாக இருக்கின்றனவே யல்லாமல், குறைவதாகவோ, மறைவதாகவோ காண முடியவில்லை. ஐ. நா. வின் அறிக்கைகளும், ஆலோசனைகளும் இதுவரையில் வெள்ளை நிறவெறிபிடித்த தெ. ஆ. யூனியன் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டுதான் வந்திருக்கின்றன. இத்தகைய செயலுக்கு ஆதரவு தரும் முறையில் தான், அமெரிக்க- ஆங்கில வல்லரசுகள், இந்தப் பிரச்சினைக்குக் கேளாச் செவியைத் திருப்பி வைத்திருக்கின்றன. சில சமயங்களில், வெள்ளை நிறவெறியினரான இவைகள் மலான் கூட்டத்தினர்க்கு, நிற ஒற்றுமையின் காரணமாக அன்பும் ஆதரவும் காட்டி வருகின்றன. இவ்வளவையுங்காணும்போது ஐ. நா.- வைக்கைப்பாவையாகவைத்து ஆட்டித், தாம் வாழவே வல்லரசுகள் கருதியிருக்கின்றன என்று எண்ண வேண்டியிருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்க்கும், பழங்குடியினர்க்கும் இழைக்கப்படும் அநீதிகளைப்பற்றி, ஐ.நா.- வின் தர்மகர்த்தா ஆட்சிக் குழுக் கூட்டத்தில், இந்தியா, சீனு, பிலிப்பைன் உள்ளிட்ட பல நாட்டுப் பிரதிநிதிகளும், விளக்கமாகவும், தெளிவாகவும், உருக்கமாகவும் எடுத்துக்கூறி, அவை களையப்பட வேண்டியதன் அவசியத்தையும் அழகுற விளக்கியுள்ளார்கள்.

தென் ஆப்பிரிக்கா முன்பு கொடுத்த வாக்குறுதிகளை இப்பொழுது மீறுவது குறித்து, அழுத்தந்திருத்தமாகக் கண்டித்து, பிலிப்பைன் பிரதிநிதியான நீதிபதி ஜோஸ் எடுத்துக் கூறியிருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவில் எத்தகைய முறைகெட்ட ஆட்சி நிலவுகிறது என்பதைக் கூற வருமிடத்து, இந்தியப் பிரதிநிதியான தோழர் சிவராவ், 'தேர்தலில் மலான் போட்டியிடுவதற்கு வைத்துக்கொண்ட மிக முக்கியமான தன்மைகளில் ஒன்று நிறவெறியாகும். ஒதுக்கல் கொள்கைதான் இந்தக் கட்சியை அதிகாரத்திற்குக் கொண்டுவந்துள்ளது. தற்பொழுது தென் மேற்கு ஆப்பிரிக்காவில் கையாளப்படும் கொள்கையால் சுதேசிகளுக்கு ஓட்டுரிமையும், பிரதிநித்துவமும் அடியோடு மறுக்கப்படுகின்றன.' என்று விளக்கியுள்ளார்.

ஜனநாயகம் உலக நாடுகள் அனைத்திலும் அரும்பெடுக்க வேண்டும் என்று மக்கள் ஆவலுற்றிருக்கும் இது நாளில், தென் ஆப்பிரிக்காவில் நிறவெறி கொடுங்கோல் தர்பார் ஆட்சி நடைபெறுகிறதென்றால், இந்தச் செயலை விடுதலை வேட்கையில் அக்கரை காட்டும் எந்த நாடுதான் சகித்துக்கொண்டிருக்க முடியும் ?

மக்களின் சமத்துவ வாழ்வில் நம்பிக்கைக் கொண்டிருக்கும் நாடுகள் அனைத்தும், இந்த நிறவெறித் திமிருக்கு முற்றுப்புள்ளி வைத்தே தீர வேண்டும். அப்படிப்பட்ட நாடுகள் அதிகமாக இணைந்திருக்கும் ஐ. நா. அவை, தென் ஆப்பிரிக்காவில், நீதிக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டும். நிறவெறியால் நீதி அங்கு துரத்தியடிக்கப்படுகிறது. ஆகவே, நீதிக்கு அங்கு இப்பொழுதே பாதுகாப்பு அளிக்க முயன்றுல்தான், எதிர்கால உலகில் அமைதி நிலவ வழி ஏற்படும் !

காங்கிரஸ் போக்கை எதிர்த்து காங்கிரசார் உண்ணாவிரதம் !

“ஐதராபாத் சமஸ்தான காங்கிரஸ் அதிகார வர்க்கத்தின் துவேஷப் போக்கை ஆட்சேபித்தும், போலீஸ் அதிகாரிகள் அளவு மீறி நடந்து கொண்டதைக் கண்டித்தும்” ஐதராபாத் ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலர் தோழர் ராமமூர்த்திநாயுடு நவம்பர் 20-தேதி முதற்கொண்டு 'சாகும் வரை உண்ணாவிரதம்' மேற்கொண்டுள்ளனர்.

பத்திரிகை நிருபர்களுக்கு இதனை அவர் அறிவித்து, கடந்த வெள்ளியன்று காங்கிரஸ் தொண்டர்கள் சிலர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தே உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதாகவும், சமஸ்தான காங்கிரஸ் கும்பல்களோடு சர்க்காரும் சேர்ந்துகொண்டு கூத்தாடுகிறதென்றும் குறிப்பிட்டார்.

மாகாணங்கள் நீதிமன்றத்திடம் மண்டியிட வேண்டுமாம் !

மாகாணங்கள் விடுதலை பெற அ. நி. சபை காட்டும் வழி

புது அரசியலுக்கு அனந்தசயனம் அய்யங்கார் தரும் விளக்கம்

“புதிய திட்டப்படி மாகாண சுயாட்சி இப்போதைவிட குறைக்கப்பட்டிருப்பதுபோலத் தோன்றினாலும், சுயாட்சியைப் பாதிக்கும் விஷயங்களைக் கோர்ட்டு தீர்ப்புக்கு விட வகை செய்யப்பட்டிருப்பதால், உண்மையில் 1935-ம் ஆண்டு சட்டத்தைவிட இது முன்னேற்றமே.”

“மேலும், திட்டத்தைத் திருத்தாமல் நாட்டின் எந்தப் பகுதியும் பிரிந்துபோக முடியாது. தனித்திருக்க திட்டத்தில் இடமுமில்லை. ஆதலால், இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்தே நாட்டின் ஒரு பகுதி பிரிந்து செல்ல அனுமதிக்க முடியும். ஒரு பகுதி தன்னிச்சையாக ஏதும் செய்ய முடியாது.”

இது இந்திய ரயில்வே உதவி அமைச்சர் தோழர் கே. சந்தானம் அரசியல் நிர்ணய சபையில், அரசியல் திட்டநகல் மூன்றும் முறையாகப் படிக்கப்பட்டபோது திட்டத்தைக், குறைகூறிய உறுப்பினர்களுக்குப் பதில் கூறும் முறையிலே பேசியிருக்கும் பேச்சு.

இன்று அ. நி. சபையில் உருவாக்கப்படும் புது அரசியல் அமைப்பு திராவிட நாட்டுக்கு உகந்ததல்ல; இத்திட்டம் அமுலுக்கு வந்தால் தற்போது திராவிடத்தின் மீதுள்ள வடநாட்டு முதலாளித்வ ஆட்சி முறை மேலும் இறுகும் தன்மைவாய்ந்ததாகவேயிருக்கும் என, நாம் அடிக்கடி கூறியிருக்கிறோம். நமது அத்தகைய கூற்றை ஆமோதிக்கும் முறையில் அ. நி. சபையில் அய்யங்கார் திருவாய் மலர்ந்தருளியிருப்பது ஊன்றி கவனிக்கத்தக்கது.

“புதிய அரசியல் திட்டப்படி மாகாண சுயாட்சி இப்போதிருப்பதைவிட குறைக்கப்பட்டிருப்பது போல தோன்றுகிறது”

என்பதை அவரே ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் சுயாட்சியைப் பாதிக்கும் விஷயங்களைக் கோர்ட் தீர்ப்புக்குவிட வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, மாகாண ஆட்சியில் உரிமை பறிக்கப்படும் என்ற உண்மையை மறைக்கப் பார்க்கிறார்.

மத்திய ஆட்சியால் மாகாண ஆட்சி பாதிக்கப்பட்டாலும் நீதிமன்றத்திடம் முறையிட்டுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறதேயென்று நாம் திருப்தியுற இடமில்லை. அதிகாரம் முழுமையும் மத்திய சர்க்காரிடமே இருக்கும் என்ற நிலை ஏற்பட்ட பிறகு அத்தகைய மத்திய ஆட்சியின் அதிகாரத்தின் கீழுள்ள நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்குமென எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்? புதிய ஆட்சி முறை அமுலுக்கு வருவதற்கு முன்பே அவசரச் சட்டங்கள் மூலம் நீதிமன்றங்களின் உரிமை பறிக்கப்படும் படுமோசமான நிலையினை இன்றயத்தினம் நாம் கண்கூடாகக் கண்டுவருகின்றோமல்லவா? அப்படியிருக்க மாகாண அரசாங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்க, அல்லது உரிமையைப் பெற நீதிமன்றத்தினிடம் திராவிடப் பெருங்குடி மக்கள் கையேந்தி நிற்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் திராவிட நாடு எப்படி வாழ முடியும்?

எனவே, அய்யங்காரின் பேச்சிலிருந்து புலனாகும் உண்மை யாதெனில், எவ்வகையிலும் மாகாணங்கள் தனியாட்சி நடத்த இந்திய அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்பதேயாகும். தோழர் அய்யங்கார் தென்னாட்டைச் சேர்ந்தவராகையால் தென்னாட்டின் விடுதலை வேட்கையை நன்கு உணர்ந்திருக்கிறார். ஆனால் தென்னாடு பிரிவதை விரும்புகிறவர் அல்ல அவர் ஆகவே, தென்னாட்டவர் கொண்டிருக்கும் விடுதலை வேட்கை வீண் வேட்கை என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

தோழர் அய்யங்காரின் பேச்சில் காணப்படும் மற்றொரு உண்மை, இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்தே பிரிவினைக்குச் சம்மதம் அளிக்கவேண்டும் என்பதாகும். மத்திய அரசாங்கத்தின் ஏகாதிபத்திய உணர்ச்சி எந்த அளவில் உள்ளது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு. ஒரு மாகாணம் சுயாட்சி பெறவேண்டுமானுல், அதற்கு இந்திய மக்கள் அனைவரும் சம்மதம் அளிக்கவேண்டும் என்ற திட்டம் எவ்வகையில் நீதியான திட்டம் என்று கேட்கிறோம். இந்திய மக்கள் அனைவரும் என்றால் என்ன பொருள்? வடநாட்டவர் அத்தனை பேரும் இந்திய மக்கள் தாம். அவர்கள் தென்னாட்டைத் தமது பிடியிலிருந்து விலக எங்ஙனம் சம்மதிப்பார்கள்? மேலும் வடநாட்டு முதலாளித்வத்துக்குத் தென்னாடு சரியான ஒரு மார்க்கெட்டாக இருக்கும்போது, அவர்கள் எப்படி சம்மதிப்பார்கள்? அவர்கள் சம்மதிக்கவில்லையென்ற காரணம் காட்டி, தென்னாட்டுக்கு விடுதலையளிக்க மத்திய ஆட்சியாளர் மறுப்பார்களாயின் அது எப்படி நீதியாகும்?

எனவே, சுருக்கச் சொல்லவேண்டுமானால், தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய அரசியல், திராவிடநாட்டுக்கு தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய விலங்கு என்று சொல்லுவதே பொருத்த முடைத்தாகும். ஆனால் ஒன்று; திராவிட நாட்டின் விடுதலை வேட்கையை எந்த அ. நி. சபையாலும் தடை செய்ய முடியாது என்பது திண்ணம். புதிய அரசியல் அமைப்பு என்ற முறையிலே எவ்வளவு பலமான தளைகள் தயாரிக்கப்பட்டாலும் காலப்போக்கிலே அவை அனைத்தும் தகர்த்தெறியப்படும் என்பது உறுதி

உற்பத்திப் பெருக ஒத்துழைப்பு தேவை

:0:

ஒத்துழைப்பைப் பெற ஜனநாயகம் தேவை

:0:

கண்டனங்களைப் பரந்த மனப்பான்மையுடன் காண்பாரா பண்டிதர்?

“சர்க்கார் மட்டும் தனியாக எதையும் சாதிக்க முடியாது. உற்பத்திப் பெருக்கத் திட்டங்களில் பொது மக்களும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். சுயநல நோக்குடன் கூடிய கண்டனங்களால் எவ்வித நன்மையும் ஏற்படாது குறுகிய மனப்பான்மையுடன் எதையும் ஆராயலாகாது.”

என்று பண்டிதநேரு அவர்கள் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்றப் பொதுக் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். பண்டிதரின் உபதேசம் பக்குவமானதோர் உபதேசமாகத்தான் காணப்படுகிறது. ஆனால், உண்மையை ஆராய்ந்து பார்க்கின்றபோது பண்டிதர் கூறுவதுபோல் பொதுமக்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் ஒத்துழைப்பு இல்லையென்றோ, கண்டனங்கள் குறுகிய மனப்பான்மையின் விளைவு என்றோ கூறுவது பொருந்தாது.

பொதுமக்களின் ஒத்துழைப்பு என்பது அரசியலாரின் ஆட்சித் திறனைப் பொறுத்ததாகும். ஆட்சியாளர் ஜனநாயக அடிப்படையில் ஆட்சி நடத்தினால் பொதுமக்களின் ஆதரவை எளிதில் பெறலாம். அஃதின்றி ஆணவத்தைத் துணைகொண்டால் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. இன்றைத்தினம் தொழிலுலகம் முதலாளித்வத்திடம் சிக்கிச் சீரழிகிறது. இதற்கு ஆட்சியாளரின் அடக்குமுறைகள் ஆக்கமளிக்கின்றன. இந்நிலையில் மக்கள் உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கம் செலுத்துவது எங்ஙனம்? இது ஒருபுறமிருக்க.

கண்டனங்கள் சுயநலநோக்குடன் கூடியனவாய் இருப்பதாக பண்டிதர் கருதுகிறார். கண்டனங்கள் எவை என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்து பண்டிதர் இம்முடிவிற்கு வந்திருக்கவேண்டும். இதுகாறும் வெளிவந்திருக்கும் கண்டனங்கள், அறிஞர்களின் அறிவுரைகள் ஆகியவற்றை நேரு அரசாங்கம் அலசி ஆராய்ந்து பார்த்து, நடுநிலை நின்று தீர்ப்பளித்ததுண்டா? இல்லையே; எதற்கெடுத்தாலும் வகுப்புவாதம், குறுகிய மனப்பான்மை, சுயநலம் என்ற குற்றச்சாட்டுகள்தானே வீசப்படுகின்றன. எனவே, பரந்த மனப்பான்மையைக் கண்டனங்கள் வீசுவோரிடமிருந்து பண்டிதர் எதிர்பார்ப்பதைவிட, அந்தக் கண்டனங்களை அலசிப்பார்க்க வேண்டிய பரந்த மனப்பான்மையைப் பொறுப்பு வாய்ந்த பண்டிதரிடமிருந்து நாம் எதிர்பார்க்கிறோம்.

எழுதாதே !

சென்னை, நவ 19—

“இதுதான் உண்மை” என்ற தலைப்புடன் கூடிய கட்டுரை ஒன்றை பிரசுரித்த காரைக்காலிலிருந்து வெளிவரும் “ஸ்டார்” என்ற பத்திரிகையின் செப்டம்பர் 19-ந் தேதி இதழை சென்னை சர்க்கார் பறிமுதல் செய்துள்ளனர்.

வெடிமருந்து சாலையாகிவிட்டது இந்தியா

கனல் கக்கும் எரிமலையில் அமர்ந்துள்ளார் நேரு

நிர்வாகம் பிடிக்கவில்லை ; தலைமை மீது மட்டும் காதல்!

'நாட்டின் இன்றைய நிலை 'எந்த நேரத்தில் வெடிக்குமோ' என்ற தகைமையிலிருந்து வருகிறது. பண்டித நேரு எரிமலை மீது அமர்ந்துள்ளார். சியாங்கே-ஷேக் நிலையை யொத்ததொரு நிலையிலேயே பண்டித நேருவும் உள்ளார்' கட்டாக்கில் நவம்பர் 20-ந் தேதி பேசிய சோஷலிஸ்ட் தலைவர் தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் இவ்வண்ணம் குறிப்பிட்டு, இந்திய உபகண்டத்தினுடையவும், தேசிய காங்கிரஸ் கட்சியினுடையவும் இன்றைய நிலைமையை ஓரளவு படம் பிடித்துக் காட்டியுள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி-பசி, விலைவாசி விஷ ஏற்றம் இன்ன பிறவற்றால் கடுமையால் தாக்குண்டு, அதிருப்திச் சுழலில் சிக்கி, உள்ளங்களில் புரட்சியலை மோத, பொங்கும் ஆத்திரத்தோடு வதியும் இலட்சாதி இலட்சம் மக்கள் நிறைந்த நாடு வெடி மருந்து சாலையென்பதில் ஐயமென்ன? சுயராஜ்யமென்றால் அதிருப்தியென்பதுதான் பொருள் போலுமென்று உணரப்பெற்று, உலுத்த வாழ்வு மேற்கொண்டு நிற்கும் மக்கள் சமுதாயத்தின் முன்னின்று, "உங்களை ஆளவந்தேன் நானே" என்று கூறிப் பெருமைக்கொள்ள நினைக்குமொருவர் 'ரோஜாப்பூ மெத்தை' யிலமர்ந்திருப்பவராகக் கருதப் படமாட்டார்: எந்த நேரத்திலும் தீக்குழம்பை உமிழக்கூடிய எரிமலைமேலமர்ந்திருப்பவராகக் கருதப்படுவார். சோஷலிஸ்ட் தலைவர், அவர் கருத்து எதுவாயிருப்பினும், இதனை நன்றாகவே சித்திரித்துக் காட்டிவிட்டார். சியாங்கே ஷேக் நிலைக்கு நேரு வருகிறாரென்றால், அதனுள் பொதிந்து கிடக்கும் உண்மை யென்ன? தேசிய காங்கிரஸ் மங்கி, கலகலத்து சிதைந்து வருகிறதென்பதுதானே! விடுதலைக்குப் பாடுபட்டதாகக் கூறிக் கொள்ளும் ஒரு ஸ்தாபனம்—தேசிய ஸ்தாபனம் — எக்காரணத்தாலோ, அவ்விடுதலை வந்துற்ற பின்னர் மக்களிடையே நீண்ட நாள் காலந்தள்ள முடியாதென்பது வரலாறு காட்டும் பாடமாகும்; அது அரசியல் விதியுமாகும். எனவே, சீனாவில் சியாங்கின் தேசியக் கட்சி சரிந்து வருவது போல், இந்தியாவிலும் தேசிய காங்கிரஸ் கரைந்து வருவதில் ஆச்சரியப் படுவதற்கோ, கலக்கமுறுவதற்கோ எத்தகையும் இடமில்லை. ஜெயப்பிரகாசரும் இதனை மனதிற் கொண்டுதான் தெளிவுபட இருக்கிறார்.

தோழர் ஜெயப்பிரகாஷ் பேசும்போதெல்லாம் ... ருப்பதாவது, 'காங்கிரஸ் பெருந்தலைகளிடத்தெல்லாம் இலஞ்சவூழல் நிலை விரித்தாடுகிறது. காங்கிரஸ், நாட்டு மக்களை எங்கே நல்ல இடத்துக்கும் இட்டுச் செல்லப் போவதில்லை."

நாட்டு நிலையினையும் காங்கி-ரஸ் நிலையினையும் இவ்விதம் தக்க முறையில் படம் பிடித்துக் காட்டும் ஜெயப்பிரகாசர், அதே மூச்சில் பண்டித நேருவையும், சர்தார்பட்டேலையும் பாராட்டிப் புகழவும் மறக்கவில்லை. நேருவும், பட்டேலும் கண்டனத்துக்கெல்லாம் அப்பாற்பட்டவர்களென புகழ் மாலை சூட்டியுள்ளார். எந்தெந்தக் காரணங்களால் தேசிய காங்கிரஸையும் 'சுயராஜ்ய' சர்க்காரையும் கண்டிக்கிறாரோ, அதே காரணங்களுக்கு—குறைபாடுகளுக்கு, பிற்போக்குத் தன்மைக்கு—ஆதாரமாய், அவற்றைக் களைய சுண்டுவிரலையும் அசைக்காமல் இருந்து வரும் தலைவர்கள் மட்டும் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள். சோஷலிஸ்ட் கட்சித்தலைவருக்கு. தேசியக் கட்சி யொன்றின் தலைமையை ஏற்று நிற்போர், அத்தேசியகட்சியின் குறைபாடுகளுக்குப் பொறுப்பாகமாட்டார்கள் என்பது எங்ஙனம்? பொறுப்பாளிகள் இல்லாவிட்டாலும், குறைபாடுகளைக் கண்டும் வாளாயிருப்பதால் அவைகளை அனுபவிக்கிறார்கள் என்று தானே யாரும் கூற முனைவர். இந்த சாதாரண விஷயம் ஜெயப்பிரகாசருக்குத் தெரியாது போனதேனோ?

காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கும் தனக்கும் தனிப்பட்ட முறையில் 'ஆன்மநேய ஒருமைப்பாடு' இருப்பின், அதற்காகப் பொது மக்கள் மன்றத்தில் நின்று பேசும் ஜெயப்பிரகாசர், புரைபட்ட போக்கில் தலைவர்களுக்குப்பின் முரணைப் போர்விடக்கூடாது. மக்களுக்கு மன மயக்கத்தை யேற்படுத்தி, தீராத தொல்லையை சிருஷ்டித்துவிடக்கூடாது. கோட்பாடுகளிரண்டுக்கிடையே நடக்கும் போராட்டத்தில் தனிப்பட்ட நபர்களையும் இழுத்துப்போட்டு, 'இரண்டுங்கெட்ட' நிலையை யேற்படுத்திவிடக் கூடாது. தோழர் ஜெயப்பிரகாசரும், அவரது கட்சியும் இப்பணியைத் தன் ஆரம்பத்திலே கோரி வருகிறார். இதனால் அவருக்கும் அவரது கும்பலுக்கும் ஆத்மலாபமோ, இதர லாபங்களோ இருக்கலாம். ஆனால் பொது மக்களுக்கு, நாட்டு நலனுக்குப் பெருந்தீங்கே வந்துறும்.

இந்தியா-பாக்கிஸ்தானிடமிருந்து வங்கத்தைக் கௌவ சதியாம்!

—————(0)—————

'இரு டொமினியன்களின் வர்த்தகப் போர் செங்கொடியார்க்கு வழியமைக்கிறது'

பொருளாதார வீழ்ச்சிகண்டு கலக்கம்

இந்தியா பாக்கிஸ்தான் வர்த்தகப் போர் குறிப்பாக இரண்டு வங்கங்களுக்குமிடையே இருந்து வரும் தகராறு—கம்யூனிஸ்டுகளுக்கு நல்லதொரு வாய்ப்பையும் பயனையுந் தந்து வருகிறதென்பதாக 'டானிஸ்' பத்திரிகை நிருபர் நவம்பர் 19-ந் தேதிய இதழில் எழுதுகிறார்.

இந்த காரணத்தால் ஏற்பட்ட பொருளாதாரத் துயரம், அவலக் கவலைகளைத்தையும் கம்யூனிஸ்ட்கள் தங்களுக்குச் சாதனமாக்கிக் கொண்டு, அதிருப்திச் சூழ்நிலை பலம் பெற ஆவன செய்து வருகின்றன என்று அவர் குறிப்பிடுகிறார்.

இத்தகைய பொருளாதார சீர்கேட்டின் விளைவாக, கம்யூனிஸ்ட்களின் தூண்டுதலால் இரு வங்கங்களையும் ஒன்றுக்க முயற்சி நடைபெறலாமென்றும் அப்படி இணைப்பதும் பெரும் வங்கத்தைத் தனிப் பகுதியாக ஆக்கி அங்கு கம்யூனிஸ்ட்கள் தங்கள் அரசியல் நோக்கங்கள் நிறைவேற வழி முறைகள் வகுக்கக் கூடுமென்றும் அஞ்சப்படுகிறது. வங்காள எல்லை மாவட்டங்களிலெல்லாம் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட சுவரொட்டிகள் அதிகமாகக் காணப்படுகின்றனவென்றும் அந்நிருபர் கூறுகிறார்.

அதிகாரிகள் இந்நிலையை அறிந்து ஆவன எதிர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்களெனினும், நாளுக்கு நாள் வங்காளத்தின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து கொண்டு போவது கிலியூட்டும் வகைமையிலே இருக்கிறதென்றும் கூறத் தயங்கவில்லை நிருபர்.

வர்த்தக சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வர இயலாமல் இந்தியா-பாகிஸ்தான் டொமினியன்கள் காலத்தைக் கடத்தி இரு வங்க மக்களுக்கும் பெரு வேதனையாயிருக்கிறதென்றும், பாகிஸ்தானின் 'விட்டுக் கொடுக்கும் சுபாவமின்மையே' இதற்கு காரணம் 'பாலிட்ஸ்' நிருபர் அபிப்பிராயப்படுகிறார்.

பாகிஸ்தான் தனது ரூபாய் மதிப்பைக் குறைத்துக்கொள்ளாமலிருப்பதால், ரூபாய் மதிப்பைக் குறைத்துக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு, அதன் சாமான்களை (சணல், கோதுமை) அதிக விலை கொடுத்து வாங்க மனமில்லை.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர் "மாலை மணி"

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

23—11—49

சென்னை-புதுப்பேட்டை :—	இரா. நெடுஞ்செழியன், சத்தியவாணிமுத்து, கே. ஏ. மதியழகன்
ஈரோடு :—	ஈ. வெ. கி. சம்பத்

24—11—49

வந்தவாசி :—	சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம், ஈ. வெ. கி. சம்பத்.
மங்கநல்லூர் :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி

நாட்டு நடப்பு

வ. உ. சி. நினைவு நாள்

வாணியம்பாடி, நவ. 19—

இராணிப்பேட்டைக் கடுத்த வாணியம்பாடி கிராம சேவைச் சங்கத்தில் 18-11-49-ல் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. நினைவு நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. கொடியேற்றமும், படஅலங்காரமும் நிகழ்ந்தன.

தோழர் கிருஷ்ணசாமி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் முனிவன், முருகேசன், முனிரத்தினம் முதலியோர் பேசினர். தலைவர் முடிவுரையில் 'தேசத் தொண்டிற்காக சிறைப்பட்டு, செக்கிழுத்த சிதம்பரனார் அந்நியருக்கெதிராக கடலிலே கப்பலை ஓட்டித் தமிழ் நாட்டையும், தமிழர்களையும் உயர்வடையச் செய்தார். அவர் நெறி நின்று நம் நாடு நலம் பெறுமாக!' என்று கூறினர்.

5-11-49-ல் சென்னையில் கூடிய தமிழக எல்லை மகாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின், இன்னிசைப் பாடல்களுடனும், நன்றி கூறலுடனும் கூட்டம் இனிது கலைந்தது. (ஓ-நி.)

நீத்தார் நினைவு

வில்வாணி, நவ. 15—

இவ்வூரில் காலஞ்சென்ற தமிழாசிரியர் வித்வான் மயில். மாணிக்கம் (ஆசிரியர் உயர்நிலைப்பள்ளி. ஆற்காடு) அவர்கள் நினைவுநாள் சொற்பொழிவு 30—10—49 மாலை 3 மணிக்கு போளூர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மணிஎழிலன், சிவகுப்புசாமி, கு. சம்பந்தம், சி. பி. சிற்றரசு ஆகியோர் பகுத்தறிவுப் புலவர் மறைந்தமைக்கு அனுதாபம் கூறி அவர் விட்டுப்போன பகுத்தறிவுப் பணியைத் தொடர்ந்து நடத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டனர். (ஓ-நி)

பேச்சுப் போட்டி

சென்னை, நவ. 15—

11-11-49 அன்று நடைபெற்ற ஒய். எம். சி. ஏ. அகில கல்லூரித் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் தோழர் ஏ. எ. வெங்கடாசலம் (அரசினர் கல்லூரி) முதற் பரிசும், தோழியர் பொன்னம்மாள் மேரி அரசினர் கல்லூரி) இரண்டாவது பரிசும் பெற்றனர். பெண்களில் முதல் பரிசு தோழியர் ஆனந்தநாயகி (மாநிலக் கல்லூரி) க்குக் கிடைத்தது. "ரோலிங் கப்" மாநிலக் கல்லூரிக்குச் சென்றது. பல கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் போட்டியில் பங்கு கொண்டனர்.

மாணவர் ஆட்சி மன்றம்

சென்னை, நவ. 19—

சென்னை தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியின் "மாணவர் ஆட்சி மன்றம்" (The Pupil's Parliament) 18-11-49 அன்று தலைமையாசிரியர் தோழர் பத்மநாபனார் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

ஆசிரியர் கழக ஆண்டு விழா

சோழவந்தான், நவ. 15—

சோழவந்தான் வட்டார ஆசிரியர் சங்கத்தின் 6-வது ஆண்டு விழா 12-11-49-ல் நடைபெற்றது. மதுரை மாவட்டக் கழகக் கல்வி அதிகாரி தோழர் ஆர். இலட்சுமி நரசிம்மன் எம். ஏ. எல். டி. தலைமை வகித்தார். மாவட்டக் கழகத் தலைவர் தோழர் என். ஆர். தியாகராசன், தோழர் சிங்காரர் ஆகியோர் "செய்திகள் ஆசிரியர்களுக்கு" என்ற தலைப்பில் பேசினர். தேனீர் விருந்துக்குப்பின் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் மீனாட்சிசுந்தரனார் "ஆரம்ப ஆசிரியர் நிலையும், சமூகமும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். பின் மாணவிகளின் ஆடல்பாடல்களுடன் விழா முடிவுற்றது. (ஓ-நி)

வாலிபர் கழகம்

வடக்குப்பட்டு, நவ. 19—

இவ்வூரில் 15-11-49 அன்று தோழர் வி. என். தத்தப்பன் அவர்கள் இல்லத்தில் கிராம வாலிபர் கழகம் நிறுவப்பட்டது. தோழர் வி. என். தத்தப்பன் அவர்களைத் தலைவராகவும், தோழர் இ. எல். வேணுகோபாலன் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட ஓர் செயற்குழு அமைக்கப்பட்டது.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ. 2—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 12—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர், "மாலை மணி"

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது.

மானேஜர் 'மாலைமணி'

சவக்குழி தோண்டும்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தன்னைத்தானே வாழ வைத்துக் கொள்ளும் தன்மையும் இல்லையென்பதை செத்த சமஸ்கிருதம்' மொழியிலக்கண ரீதியில் நிரூபித்து விட்டது. காலப் போக்கு, கருத்து வளர்ச்சி, இயற்கைச் சூழ்நிலை, இக்கால வசதி வாய்ப்புகள் இன்ன பிற வற்றுக்கு எத்துணையும் ஒத்து வரக் கூடியதல்ல சமஸ்கிருதம் என்பது அது தானே மங்கிமடிந்துபோனதிலிருந்தே நன்கு வெளியாகின்றது. அதை எடுத்து இப்பொழுது ஆட்ட நினைப்பது ஆதிக்கக்காரர்கட்குப் புரிப்பாயிருக்கலாமே தவிர, அறிவுடன் பட்ட நல்லெண்ணமுடையார்க்கு வீணை-வேண்டாத-வேலையாகவே தோன்றுமென்பது உறுதி.

இந்திய கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றின் வளத்தையும், தூய்மையையும் அறிய பெருஞ்சாதனமாக இருக்கிறது சமஸ்கிருதம் என்கிறார் ஆச்சாரியார் டி. ஏ. வி. தீக்ஷதர்! இந்திய உபகண்டத்தின் எப்பகுதி கலாச்சாரத்தைப்பற்றிப்பேசுகிறார் தீக்ஷதர் என்று கேட்கிறோம். இவ்வுபகண்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் தங்களுக்கெனத் தனிகலை, நாகரிகம், மொழிச் சிறப்பியல்புகளோடு திகழ்கின்றன. இவற்றுள் எதை இந்திய நாகரிமெனக்கொண்டாடுகிறாரென்று கேட்கிறோம். அனைத்தும் சேர்ந்த கலப்படமே இந்திய நாகரிகம் என்றாரேல், அப்படி அவை ஒன்றோடொன்று இணைய முடியாதே. அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டவை மட்டுமல்லவே; பெரிதும் மாறுபட்டவையாயிற்றே; அவை இணைந்து ஒரே நாகரிகமாகக் காட்சியளித்தில் எங்ஙனம் இயலும்? எனவே தீக்ஷதர் குறிப்பிட்டுப் பேசியது தமக்கும் தாம் கொண்ட கோட்பாட்டுக்கு உரிய வடவர் (ஆரிய) நாகரிகமாகத்தானிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. அன்றியும், சமஸ்கிருதம் சாற்றுவது ஆரியத்தின் ஏற்றத்தைத்தான். ஆரிய நாகரிகத்துக்கு ஏற்றங் கற்பித்து இதர (திராவிட) நாகரிகத்தைப் பலவாறுக இழித்தும், பழித்தும் பேசும் சமஸ்கிருத மொழியின் வளர்ச்சியையும் வியாபகத்தையுந்தான் விரும்புகிறார் தீக்ஷதர். இப்பணிக்குத்தான் எல்லா இந்திய சமஸ்கிருதப் பல்கலைக் கழகம்வேண்டுமென்கிறது சம்மேளம்.

நியாயமான, நாகரிகமான கோரிக்கையெதையும் யாரும் ஆட்சேபிக்க முன்வரமாட்டார்கள். இந்திய கலாச்சாரம் சமஸ்கிருதத்தில் மண்டிக்கிடக்கிற தென்கிறார் தீக்ஷதர். சமஸ்கிருதம் போதிக்கும் நாகரிகமும் கலாச்சாரமுந்தான் என்ன? பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பிப்பது, ஆறறிவுள்ள மக்கள் சமுதாயத்தையே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்-பஞ்சமன் சண்டாளன் எனப் பாகுபடுத்தி வருண பேதம் கற்பித்தது, வேதசாஸ்திர, ஸ்மிருதிகளை சூத்திரன் நெருங்கவும் கூடாது எனக் கடிவது, படுதெய்வ வழிபாட்டை அனுமதிப்பது, மானத்தைவிட்டும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாமென அனுமதிப்பது. இன்னும் என்னென்ன ஆபாசங்கள்-அத்தனைக்கும் 'லைசென்ஸ்' தருவது: இவைகள் தாமே சமஸ்கிருதம் காட்டும் கலாச்சாரமும் நாகரீகமும். இவை வாழ, சமஸ்கிருதமும் வளர வேண்டுமா? இத்தகைய நச்சுக்கருத்துக்களைக்கொண்ட சமஸ்கிருதத்துக்கு ஒரு பல்கலைக் கழகம் தேவைவதாகு? தன்மானம்—தன் நம்பிக்கையுணர்வு மலிந்து காணப்படும் இற்றையுலகில் இப்படிப்பட்டவொரு மொழி தலையெடுக்க முடியுமா? மக்கள் மத்தியில் அதற்கு செலாவணி கிடைக்குமா? இவற்றையெல்லாம் யோசித்துப்பார்க்க வேண்டாமா ஆதிக்கக்காரர்கள்?

சாதாரண பேச்சு வழக்குக்குக்கூட அருகதையற்றுப் போய்விட்ட ஒரு மொழி, கால வேகத்தில்இயல்பாகவே மறைந்துவிட்ட ஒரு மொழி இராமாயணத்தின்மீது மக்களுக்கு இன்னும் மரியாதை இருந்தே வருகிறது. இதனை என்ன தெரிகிறதென்றீர், சமஸ்கிருதப் பண்! மக்கள் குருதியில் இரண்டறக்கலந்துவிட்டதென்பது பெறப்படுகிறது. எனவே, சமஸ்கிருதத்தை மீண்டும் பழையநிலைக்குக் கொணர்வதா கடினம்?' என விசித்திரவாதம் புரிகிறார், தீக்ஷதர். மக்கள் மன்றத்தில் இன்று இராமாயணத்துக்கு இருப்பதாகக்கருதப்படும் ஆதரவின் அந்தரங்கங்கள் எவையெவை? இராமாயணத்தை மௌடிகத்தால் சிலர், கதைக்காகச் சிலர், கடவுள் தன்மைக்குச்சிலர், கட்டுப்பாடான பிரசாரத்துக்குச் சிலர், ஆராய்ச்சிக்குச் சிலர்-இப்படி சிற்சிலர் பயிலவும், பிலக்கேகவும் செய்கிறார்களே தவிர, மொழிகளுக்காக, அதன் ஆழத்துக்காக, அதன் மீதுள்ள பக்தி, மரியாதைக்காகப் படிப்போர் எத்தனைபேரென்று கேட்கிறோம். தீக்ஷதர் கூறுவதுபோல் இராமாயணக் கதையில் மக்கள் 'சொக்கி' யிருக்கிறார்களென்றால், சமஸ்கிருத வளர்ச்சிக்கெனத் தனி முயற்சி யெடுக்கத் தேவையில்லையே! மக்கள் மன்றத்தில்தானே செல்வாகுப் பெற்றுவிடுமே சமஸ்கிருதம்! இராமாயண கதையையும் சரித்திர ரீதியில் ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டு விட்டனர் மக்கள்! இந்நாட்டுக் குரியோரை அடக்கியாள சூழ்ச்சி பல செய்ததின் சித்திரமே இராமாயணம் என்பதை மக்கள் தெரிந்துகொண்டு விட்டனர். இராமாயணத்தைப் பஜித்துப் பூஜிப்பது அந்நியன் காலடிக்கு அன்பு மரியாதை செய்வதற்கினை யென்று உணரும் காலம் வந்து நீண்ட நாளாயிற்று. ஆகவே, இராமாயணத்தை 'தர்மா மீட்டராக' வைத்து, சமஸ்கிருதத்தைப் பரப்ப வரவேண்டாம் 'தீக்ஷதர் கும்பல்' என மீண்டும் வற்புறுத்துகிறோம்.

கலை நாகரிகச்சிறப்புகளால் உலக மொழிகளையெல்லாம் விஞ்சி, ஒரு தனிச் செம்மைப் பெரு மொழியாகத் திகழும் தமிழுக்குத் தனிபல்கலைக் கழகத்தைக் காணோம்; நாகரிகக் கோட்பாடுகளோடு நானிலத்துக்கும் அறிவு பரப்புக்கூடிய நற்கருத்துக்களையும் பெற்றுமிளிரும் தமிழுக்குத் திக்கது செய்யமுன்வருவாரில்லை; ஆங்காங்கிருந்த ஓரிரண்டு தமிழ்ச் சங்கங்களும நல்லாதரவின்றி, நலியவேண்டிநேரிட்டது. இது கண்டு கண்ணீர் வடிக்ககூட ஆளில்லை; ஆனல் அதேநேரத்தில்செத்தமொழிக்குச்சப்பைக் கட்டுப்போட பற்பலர், அதற்கு ஆட்சியாளர் ஆக்கமும், ஊக்கமும் தர அதுகண்டு வாளாயிருக்க கண்மூடிமௌனிகளானல் பின்னாற்றுவர்! என்செய்வது?

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள்

தோற்றுவிக்காத ஊர்களில் உடன் கிளைகளைக் காணுங்கள்!

கடமையை ஆற்றக் கிளர்ச்சிகொண்டு எழுவீர்!

மணிக்கு 590 மைல் செல்லும் விமானம்

ஜான் கன்னிங்ஹாம் என்னும் விமான தளபதியினுல் செலுத்தப்பட்ட 'டிஹ-விலிலாண்ட்' என்னும் விமானம் மணிக்கு 590மைல் வேகத்தில் பறந்துசென்றதாம். ஷெட்லாந்து தீவிலிருந்து ஹாட்பீல்ட் விமானதளம் வரையில் சென்றதாம். இதற்குச் சரியாக ஒரு மணி நேரமாகிற்றும். இதுகாறும் இவ்வளவு வேகமாக எந்த விமானமும் பறந்ததில்லை என்று சொல்லப்படுகிறது.

கலப்பு மணம்

மேலச்சின்னணம்பட்டி, நவ. 18—

இவ்வூர் தி. மு. கழகச்செயலாளரும், "அண்ணு அறிவு மன்றச் உறுப்பினருமான தோழர் பழனி" சாமிக்கும், தோழியர் முத்துமாலைக்கும் 17-11-49 அன்று கலப்பு மணம் சிறப்புற நடந்தேறியது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம். நன்றி! (ஆ-ர்)

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

ஈரோடு

கோயம்புத்தூர்

உதகை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

எப்பொருளிடத்தும்...

—[4-ம் பக்கத் தொடர்ச்சி]—

பெங்களூர் வரை மேற்கே நோக்கியம் போனுல், எண்ணற்ற நிலங்கள் நீர் வசதியில்லாமையாலும்-ஆண்டான் அடிமைத் தகராறுகளாலும்—கிணறு எடுக்கப் பணமில்லாத காரணத்தாலும், இன்னும் சிற்சில காரணங்களால் பல ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படாமல் பாழாகக்கிடக்கின்றன. இதைவிட்டுவிட்டு சென்னையில் இருப்பது ஒரே ஒரு நகர நடு இடம், (ஜிம்கானு) ஐலண்டு மைதானம் இவ்விடம், மனிதன் தனிமையை நாடி இருக்கவே உள்ளம் தனித்திருந்து உவகை பெறவோ, நல்ல கடற்காற்றை உட்கொண்டு திடகாத்திரம் பெறவோ, கூட்டம் கூட்டவோ அமைக்கப்பட்ட ஒரு மைதானம், இவ்விடத்தை ஆளவந்தார்கள் இராணுவப் படையினரைக் கொண்டு டிராக்டரின் மூலம் உழுகின்றனர், ஏன்? பயிரிட! எப்படி திட்டம்!! உண்மையிலேயே இது வெளிப் பகட்டு-வெளி வேஷம் இல்லாமல் வேறு என்ன?

"ஏனப்பா இப்படி பொது இடத்தைப் பாழாக்குகிறுய்" "தேவை யில்லை எங்களுக்கு"! மந்திரிகள் தருகின்ற பதில் இது! நீங்கள் கூட்டம் போட்டால் மக்கள் வருவதில்லை. ஆகவே உங்களுக்குத் தேவையில்லை! நியாயம்- ஆகவே யாருக்கும் உபயோகப்படாது என்பது அர்த்தமா? ஏன் இந்த அச்சம் இவ்வளவு பெரிய சர்க்காருக்கு நம்மைக் கண்டு என்பதுதான் நமக்குப் புரியவில்லை!

கட்டைவிரல்தான் பாக்கி!

திராவிட இயக்கத்தவர்களைக் கட்டை விரலை எடுக்காமல் விட்டுள்ளதே தவறு என்று, சாதாரண பாமரன் கூறியிருந்தால் எங்களுக்குக் கவலை யில்லை. ஆனல் பெரிய தலைவராக, அரசாங்க அவையிலே வீற்றிருக்கிற தமிழ் நாட்டு ராஷ்டிரபதி தோழர் காமராஜர் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்! அவர் கட்டைவிரலைக் கேட்பது எதைக்குறிக்கிறது? அவர்களாலே அடக்குமுறை அம்புகளை யெல்லாம வீசியாகி விட்டது. இனி பாக்கி கட்டை விரலை வெட்டவேண்டியது என்பதுதானே! அந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது அவர்களின் அகிம்சை ஆட்சி!

கட்டைவிரல் போயினும், நான்கு விரல்களாலே, ஓலையும் எழுத்தாணியும் கொண்டு எழுதுவோம். அவையும் போயின், குரல் எட்டுகிறவரை கூவியுரைத்திடுவோம். அதற்கும் பூட்டிட்டால், ஜாடை மாடை காட்டி, எங்கள் அறிவுப் பணியை— நற்புரட்சியை இந்நாட்டில் எங்களிடத்திலே ஒரு துளி குருதி இருக்கின்ற வரை செய்தே திருவோம்!"

திருத்தம்

நேற்றைய (சென்னை 21-11-49 வெளியூர்22-11-49) "மாலை மணி" யில் 4-வது பக்கத்தில் 'தி. மு. கழகங்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள 'தங்காவி-சித்தூர்க்கிளை' என்பதைத் தங்காவி—சித்தூர்க் கிளை எனத் திருத்திப் படிக்கவும். (ஆ-ர்)

பொதுக்கூட்டம்

சென்னை புதுப்பேட்டை

31-வது வட்ட தி. மு. க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 23—11—49 புதன் மாலை 5-30 மணிக்கு சென்னை புதுப்பேட்டை வேலாயுத ஆச்சாரி தெருவில் (செக்ரூட்டிங் ஆபீஸ்க்கு அருகாமையில்) நடைபெறும். அதுபோது,

தோழர்கள்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,
கே. ஏ. மதியழகன் பி. ஏ.,
தோழியர்
சத்தியவாணிமுத்து
ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். (வி. உ.)

இனி நடப்பவை

ஈரோடு—இவ்வூர் தி.மு. கழகக் கிளையின் சார்பில் 23—11—49 புதன் அன்று நகரப் பள்ளி மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஈ.வி.கே. சம்பத், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சூலூர் :—தோழர் எஸ். எம். ராயப்பன்—தோழியர் ஏ. பேச்சியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 24—11—49 வியாழன் காலை 10 மணிக்கு தோழர் பேச்சிராயர் இல்லத்தில் நடைபெறும். தோழர் எஸ், இராமசாமி தலைமை வகிப்பார்.

● ● ●

ஆற்காடு :—இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் கூட்டம், 23—11—49 காலை 9 மணிக்கு தோழர் மணிஎழிலன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். எல்லா உறுப்பினரும் தவருது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

ஆற்காடு:—இவ்வூர் தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் 27—11—49 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு கஸ்பா திருவள்ளுவர் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

வாணியம்பாடி :—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 23—11—49 புதன் கிழமை மாலை 5 மணிக்கு நியூடவுன் தோழர் டி. ஏ. ஆறுமுகம் அவர்களின் (எண் 236) இல்லத்தில் நடைபெறும். அதுபோது; பல முக்கிய பிரச்சினைகள் ஆலோசிக்கப்படும். உறுப்பினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

● ● ●

அருப்புக்கோட்டை :—தி. மு. க. பொதுச் செயலாளரிய தோழர் சி. என். அண்ணாதுரை மதுரை—இராமநாதபுரத்தின் சுற்றுப்பிரயாணத்தின் போது, 1—1—50-ல் பெரும்பாலும் அருப்புக்கோட்டைக்கு வரக்கூடும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்க் கழகத் தோழர்களைத் தோழர் எம். எஸ். இராமசாமி அறிவிக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.